செய்தி வெளியீடு எண்: 478 நாள்:– 13.8.2009

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

# செய்தி வெளியீடு– 13.8.2009

வெளிநாடுகளில் இருந்து தமிழ்நாட்டிற்கு வரும் பயணிகளுக்கு A H1N1 வைரஸ் காய்ச்சல் உள்ளதா என்பதை அறிய விமான நிலையங்களிலும், துறைமுகங்களிலும் பரிசோதனை செய்யப்படுகின்றனர். இதுவரை சென்னை, திருச்சி மற்றும் கோயம்புத்தூர் விமான நிலையங்களில், வெளிநாடுகளிலிருந்து 4,981 விமானங்களிலிருந்து வந்த 7,83,321 பயணிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளனர். சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களுக்கு வந்த சரக்கு கப்பலில் இருந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சுமார் 7,221 நபர்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் இதுவரை சந்தேகத்திற்குரிய 461 நபர்களுக்கு மட்டுமே தொண்டை சளி மாதிரிகள் எடுக்கப்பட்டு உள்ளது. ஆய்வில் 57 நபர்களுக்கு மட்டுமே இந்நோயின் தாக்கம் உள்ளதாக உறுதி செய்யப்பட்டு அவர்களுக்கு தேவையான சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. சந்தேகத்தின் பேரில் மேலும் 57 நபர்களிடமிருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இவர்களுக்கு இந்த நோய் இருப்பது இன்னும் உறுதி செய்யபடவில்லை. சந்தேகத்தின் பேரில் இவர்கள் தனிமைபடுத்தப்பட்டு அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் இதுவரை ஒரு இறப்பு மட்டுமே ஏற்பட்டுள்ளது.

அன்றாடம் தமிழ்நாட்டில் மூன்றுமுதல் நான்கு இலட்சம் நபர்கள் காய்ச்சலால் பாதிக்கப்படுகின்றனர். மழை காலங்களில் இந்த எண்ணிக்கை சற்று கூடுதலாக இருக்கும். காய்ச்சல் உள்ளவர்கள் அனைவருமே “ஸ்வைன் ப்ளு” காய்ச்சல் என்று கருதி பரிசோதனை செய்துகொள்ள கிண்டி கிங் ஆய்வுகூடத்திற்கு வரத்தேவையில்லை. காய்ச்சல், இருமல், தொண்டை வலி, உடல் வலி, வாந்தி மற்றும் வயிற்றுப் போக்கு போன்ற நோய்களால் பாதிக்கப்படுவார்கள் அருகிலுள்ள அரசு மருத்துவமனைக்கு சென்றால் மருத்துவர்கள் சிகிச்சை அளிப்பார்கள். “ஸ்வைன் ப்ளு அறிகுறிகள் தென்பட்டால் அரசு மருத்துவர்களே மாதிரிகள் எடுத்து கிண்டி கிங் ஆய்வுகூடத்திற்கு பரிசோதனைக்கு அனுப்பிவைப்பார்கள். எனவே பொதுமக்கள் கிண்டி ஆய்வுகூடத்திற்கு நேரில் வருவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தமிழகத்தில் “ஸ்வைன் ப்ளூ” நோயின் தாக்கம் அதிக அளவில் இல்லை. இந்த நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை மிகமிக குறைவு. எனவே பள்ளிகளுக்கு விடுமுறை விடவேண்டிய சூழ்நிலை தற்போது தமிழகத்தில் இல்லை. பள்ளியில் மாணவர்களில் எவருக்கேனும் இந்த நோய்க்கான அறிகுறிகள் இருந்தால் அவர்களுக்கு மட்டும் விடுப்பு வழங்கி அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஆசிரியர்பெருமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த வைரஸ் நோய் உள்ளதா என்பதை கண்டறிய தேவைப்படும் பரிசோதனை உபகரணங்களும், இந்த நோயை குணப்படுத்த தேவைப்படும் டேமி ப்ளு மாத்திரைகளும் போதுமான அளவில் மத்திய அரசால் வழங்கப்பட்டு கையிருப்பில் உள்ளது.

தமிழகத்தில் இந்த நோய் மேலும் பரவாமல் இருக்கவும் நோய் வந்தவர்களுக்கு பரிசோதனைஅளித்து சிகிச்சை அளிக்கவும் எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. எனவே இந்த நோயை பற்றி பீதியடைய தேவையில்லை. அதே நேரத்தில் தேவையான முகக் கவசங்களை பதுக்குவதாகவும் அளவிற்கு மீறிய விலையில் விற்பதாகவும் ஓரிரு இடங்கலிருந்து தகவல்கள் வந்துள்ளன. இப்படி முகக் கவசங்களைப் பதுக்குபவர்கள் மீதும், அதிக விலைக்கு விற்பவர்கள் மீதும் அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும். அதே நேரத்தில் பொதுமக்களும் N–95 என்ற முகக் கவசத்தை அணிந்தாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இந்தக் கவசம் மருத்துவர்கள், மருத்துவ ஆய்வகங்களில் பணியாற்றுபவர்கள் மற்றும் இரத்த மாதிரிகளை எடுக்கக்கூடிய பணியாளர்கள் மட்டுமே பயன்படுத்தக்கூடிய ஒன்று என்பதையும் பொதுமக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்

**கே.எஸ். ஸ்ரீபதி**
**தலைமைச் செயலாளர்**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.